**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**

**MCOP.No. 2 /2023**

Deposition of witness for **PW1** for Petitioner and solemnly affirmed and oath for sworn taken file by Tr. R.Sankar, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | |
|---|---|---|---|
| Name : Sindhu/Guardian For Harshan | | Father Name : | Senthil Kumaran |
| Village : Denkan | | Age : | |

**நாள்:24.01.2025.**

**2ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

சத்தியமாக சொல்கிறேன்.

விபத்து நடந்தபோது நான் போலீஸ் குவாட்ரஸ்சில் தான் குடியிருந்தேன்.

அந்த சம்யத்தில் எனது கணவல் கெலமங்கலம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்தார்

விபத்து நடந்த சமயத்தில் நான் ஜாமான்கள் வாங்கி கொண்டு வீட்டிற்கு நடந்து சென்றபோது போலீஸ் குவாட்ரஸ் அருகாமையில் நடந்தது.

நாங்கள் கடையில் இருந்து போலீஸ் குவாட்ரஸ் க்கு நடந்து இடது புறமாக ரேடில் ஓரமாக சென்றோம்.

எனது குழந்தையை என்கையில் இடது புறமாக பிடித்து ரேட்டின் ஓரமாக தான் அழைத்து சென்று கொண்டிருந்தேன்.

எனது மகனை இடித்த டாட்டா சுமோ தேன்கனிக்கோட்டையில் இருந்து கெலமங்கலம் நோக்கி வந்து எங்கள் பின் பக்கமாக மோதிவிட்டது.

எனது மகனை இடித்த சுமோ வண்டியில் தான் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள்.

நான் நடந்த சம்பவத்தை தான் மருத்துவரிடம் கூறினேன் என்று சொன்னால் சரிதான்.

நான் இறுதியான தனியார் மருத்துவமனையான ஸ்பெர்ஸ் மருத்துவமனையில் 14.04.2019 ம் தேதி அனுமதிக்கப்பட்டு 16.04.2019 ம் தேதி டிஸ்சார்ஜ் அகிவிட்டோம் என்றால் சரிதான் ஆனால் அதற்கு பின்னிட்டு ஒரு வாரம் OP ஆக வைத்தியம் செய்தோம்.

21.04.2019 ம் தேதி தான் நான் புகார் அளித்து FIR போடப்பட்டது.

விபத்து நடந்து 7 நாட்கள் கழித்து தான் புகார்அளிதேன் என்றால் சரிதான் எனது மனனுக்கு அடிப்படதாலும் எனது மகனுக்கு சிகிச்சை அளித்து கொண்டிருந்ததாலும் மேற்படி கால தாமதம் ஆகிவிட்டது.

நான் கூறுகேிற்னன் இந்த விபத்து ஒரு டுவிலர் இடித்ததால் தான் நடந்தது என்று கசொன்னாலும் இடித்தடுவில் நிற்காமல் சென்றதால் இந்த விபத்தை பார்த்த டாட்டா சுமோ ஓடடுநார் மனிதாபி மானத்தில் அவர் வண்டியை நிறுத்தி அவர் மருததுவமனைக்கு எங்னயை ஏறறி சென்றால்ா என்றாலும நஷ்ட ஈடு பெறவேண்ட உங்களது கணவிரின் இன்புளியன்சை பயன்படுத்தி சுமோ வாகனத்தின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிய்ல்ல.

நான் கூறுகிறேன் எங்களது காப்பீடு நிறுவத்தில் காப்பீடு செய்யப்பட்ட டாட்டாசுமோ வாகனத்தால் விபத்து ஏற்பட்வில்லை என்று சொன்னாலும் டுவீலர் வாகனத்தினால் தான் விபத்து ஏற்றப்பட்டது என்பதால் நாங்கள் நஷ்டஈடு தர தேவையில்லை என்ற சொன்னாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

ஓம்./–திரு.ஆர்.ஹரிஹரன்.,எம்.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.